

# கதை வழி திருக்குறள்



ராமுவும் டேவிட்டும் நண்பர்கள். இருவரும் சேர்ந்தே பள்ளிக்குச் செல்வார்கள். அவ்வாறு செல்லும் போது தங்களுடைய படிப்பு பற்றி பேசுவார்கள். டேவிட் நன்றாக படிப்பான். ராமுவும் நன்றாக படிப்பான், எனினும் சிறிது சோம்பல் உடையவன். ராமு சோம்பேறியா இருக்காதே! என்று டேவிட் எச்சரித்தாலும் ராமு அதை கண்டுகொள்ளமாட்டான். ஒருநாள் அதிக மதிப்பெண் எடுத்ததற்காக டேவிட்டுக்கு பரிசு கொடுத்தார்கள். ராமு அப்போதுதான் தன் தவறை உணர்ந்தான்.

அன்று முதல் டேவிட்டின் அறிவுரையைக் கேட்டு நடந்தான். அடுத்து வந்த தேர்விலும் விளையாட்டுப் போட்டியிலும் ராமு அதிக பரிசுகளைப் பெற்றான்.

நாமும் டேவிட்டைப் போல நண்பர்களின் தவறை சுட்டிக்காட்டி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.மேலும் அவர்களின் அறிவுரையையும் கேட்டு நடக்க வேண்டும் இதனையே தான் வள்ளுவரும்

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்<br>
மேற்சென்று இடித்துரைத்தல் பொருட்டு

என்று கூறுகிறார்.

www.noolagam.com